DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : O.S.No. 30/ 2019 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : D.W. 1 |
| Name | : பேச்சியம்மாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026.

-----

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி. பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

1. 06.04.2006ம் தேதிய தாவா 1 முதல் 5 இலக்க சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் கணவர் ஆண்டவர் புகைப்படத்துடன் கூடிய பட்டா பாஸ்புத்தகம் அசல் பி.வா.சா.ஆ.1.
2. 09.08.2010ம் தேதிய தாவா 1 முதல் 5 இலக்க சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் புகைப்படத்துடன் கூடிய பட்டா பாஸ்புத்தகம் அசல் பி.வா.சா.ஆ.2.
3. 24.06.2013ம் தேதிய 1ம் பிரதிவாதி, எனக்கு தாவா 1 முதல் 5 இலக்க சொத்துக்களில் அவரது பாகத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3. (அசல் ஆவணம் என் கைவசம் உள்ளது).
4. 23.07.2013ம் தேதிய தாவா 1 முதல் 5 இலக்க சொத்திற்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரிலுள்ள கணினி சிட்டா உண்மை நகல் பி.வா.சா.ஆ.4.

5. 02.11.2016ம் தேதிய தாவா 2 முதல் 4 இலக்க சொத்துக்களில் 2 முதல் 4 பிரதிவாதிகள் சேர்ந்து முத்து மகன் பூப்பாண்டி என்பவருக்கு 31 சென்டு நிலத்தினை கிரையம் எழுதிக்கொடுத்ததற்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சாஆ.5.

6. 26.09.2024ம் தேதிய தாவா 2 முதல் 4 இலக்க சொத்துக்களில் 2 முதல் 4 பிரதிவாதிகள் சேர்ந்து பின்னியப்பத்தேவர் மகன் மதிவாணன் என்பவருக்கு 11 சென்டு நிலத்தினை கிரையம் எழுதிக்கொடுத்ததற்கான கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சாஆ.6.

7. 13.04.2026ம் தேதிய நான் விற்பனை செய்த நிலம் போக மீதியுள்ள நிலத்திற்கு உத்தப்பநாயக்கனூர் கிராம நிர்வாக அலுவலர் பசலி 1435க்கு எனது பெயரில் வழங்கிய அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.7. (வாதி தரப்பில் மேற்படி அடங்கல் பதிவேடு 2025ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தபிறகு வாங்கப்பட்டது என ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

**குறுக்கு விசாரணை:** வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**Sd/-P.S.Ruskin Raj,**
**Sub Judge,**
**Usilampatti.**